OS. No. : 51/2023

நாள் : 18.03.2025

வா.சா. : 1

பெயர் : அன்பழகன்

**1 முதல் 4 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 1979 முதல் தஞ்சாவூர் மாவட்டம், மெலட்டூரில் வசித்து வருகிறேன். தாவா சொத்து உள்ளது சீர்காழி, கொண்டத்தூர், வைத்தியநாதபுரம் என்ற இடத்தில் உள்ளது. மெலட்டூரில் 1989ல் மாடி வீடு கட்டி குடிபோனேன். 15.09.1967 அன்று நான் இடைநிலை ஆசிரியராக பணியில் சேர்ந்தேன். தாவா சொத்து என் அம்மா பெயரில் உள்ளத சொத்து அந்த சொத்து என் அம்மாவிற்கு எப்படி கிடைத்தது என்றால் என் அம்மாவின் அப்பா கிரயம் பெற்றுள்ளார். அதன்பிறகு என் அம்மா பெயரில் பட்டா உள்ளது. என் அம்மாவிற்கு சொத்து எப்படி வந்தது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் அம்மாவிற்கு அவர் அப்பா மூலம் கிடைத்த சொத்து. 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பானருமாகிய அறிவழகன் எந்த வருடத்தில் வேலைக்கு போனார் என்றால் தெரியாது. அறிவழகன் எனக்கு 20 வயதானபிறகு தான் பிறந்தான். நான் வேலைக்கு போகும்போது எனக்கு 19–20 வயது. நான் வேலைக்கு போய் ஒரு 20 வருடம் கழித்து அறிவழகனுக்கு காவல் துறையில் வேலை கிடைத்திருக்குமா என்றால் கிடைத்திருக்கும். தாவா சொத்து வீட்டு மனை அதைத்தொடர்ந்து புன்செய் நிலம் அந்த சொத்தை 40 வருட காலமாக அறிவழகன் மனைவிதான் விவசாயம் செய்தார் பராமரித்தார் என்றால் சரி. என் தந்தை நாரயணன், என் தாயார் மங்களம், என் தம்பி அறிவழகன் உயிருடன் இருக்கும்போது அந்த சொத்தை பாகம் பிரித்து கொடுக்கும்படி நான் கேட்கவில்லை என்றால் சரி. கிராம நாட்டாமை

மூலமாகவோ, வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பியோ சொத்தை பாகம் பிரித்து கொடுக்கும்படி கேட்கவில்லை என்றால் சரி. தாவா சொத்தின் மேல் புறத்தை அறிவழகனும், கீழ் புறத்தை நானும் அடையவேண்டும் என்று என் அம்மா சொன்னதாக வழக்குரையில் நான் சொல்லியுள்ளேன் என்றாலும் அது எந்த தேதியில் என்று சொல்லவில்லை என்றால் சரி. என் அம்மா அப்படி சொன்னதாக சொல்லி அறிவழகன் மேற்புறத்தில் வீடு கட்டிக்கொண்டான். அறிவழகன் அந்த இடத்தில் வீடு கட்டி எத்தனை வருடம் இருக்கும் என்றால் ரொம்ப வருடமாக கட்டினார்கள். 2023ல் தான் குடிபோனார்கள். வீடு குடிபோகும்போது என் தம்பி அறிவழகன் உயிருடன் இல்லை. அந்த வீடு குடிபோகும் நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்ளவில்லை. தாவா சொத்திற்கு கிழக்கே என் மனைவி கிரேஸ்மேரி பெயரில் ஒரு மனை வாங்கி வீடு கட்டியுள்ளேன் என்றால் சரி. அந்த வீடுகட்டி எத்தனை வருடமாகிறது என்றால் 2023 ஆகஸ்டில் குடிபோனோம். அந்த வீட்டை கிராமத்தில் உள்ள ஒரு நபருக்கு வாடகைக்கு விட்டேன் என்றால் சரி. அதை காலி செய்து விட்டார். எங்கள் கிராமத்தில் நிறைய பேர் செங்கல் காளவாய் தொழில் செய்கிறார்கள் என்றால் சரி. என் தம்பி மனைவியும் எங்கள் நிலத்தில் 30 வருடத்திற்கு மேல் காளவாய் போட்டு நிலத்தை பாழ் செய்துவிட்டார். நான் அந்த நிலத்தில் சாகுபடி எதுவும் செய்யவில்லை என்றால் சரி. என் அம்மா உயிருடன் இருக்கும்போதே ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் சொத்தை அறிவழகனே அந்த சொத்தை அனுபவித்து கொள்ளலாம் என்று சொல்லிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணை அபிடவிட்டில் நான் தாவா சொத்தில் குடியிருப்பதாக காட்டுவதற்காக அந்த விலாசத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய

சொந்த ஊரே அது தான். என்னுடைய ஆதார் கார்டில் தஞ்சாவூர், மெலட்டூர் விலாசம் தான் உள்ளது. அதனால் தான் இந்த வழக்கில் ஆதார் கார்டு நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் தாக்கல் செய்யும்படி சொல்லவில்லை. என் மனைவி கிரேஸ்மேரி கிராம சுகாதார செவிலியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரி. 2000ல் ஓய்வு பெற்றார். நான் அறிவழகனிடம் தனிப்பட்ட முறையில் நான் தஞ்சாவூரில் செட்டில் ஆகிவிட்டேன் இந்த சொத்தை நீ எடுத்து கொள் என்று சொல்லிவிட்டேன் என்றால் சரியல்ல. ஒருபோதும் சொல்லவில்லை. நான் வேண்டுமென்றே திட்டமிட்டு என் தம்பி, அம்மா, அப்பா ஆகியோர் இறந்தபிறகு 1ம் பிரதிவாதியிடமிருந்து சொத்தை அபகரிக்க வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு அந்த சொத்தில் உரிமை இருந்திருந்தால் 40 வருடகாலத்தில் எதாவது சட்டநடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. தமிழரசியை அறிவழகனுக்கு நான் தான் திருமணம் செய்து வைத்தேன். 1ம் பிரதிவாதி தமிழரசி எனது மாமன் மகள். என் அம்மாவின் பெரியப்பா பேத்தி. தாவா சொத்தின் கிழக்கே என் மனைவி கிரேஸ்மேரி ஒரு மனை வாங்கி மாடிவீடு கட்டி வருகிறார் என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மாடி வீடு கட்டி குடிபோய்விட்டோம். தாவா சொத்தின் புல எண்கள் தெரியுமா என்றால் நினைவில்லை. தாவா சொத்தின் நான்கெல்லை விவரம் தெரியும். மேற்கே கதிரேசன் வகையறா நிலம். வடக்கே பொய்கை, கிழக்கே கிரேஸ்மேரியின் மனை, தெற்கே மெயின்ரோடு (பிரதான சாலை). தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியாது என்றால் சரியல்ல 69 ஏர்ஸ். நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது இல்லை என்றால் சரியல்ல எனக்கு அந்த சொத்தில்

உரிமை உள்ளது. 40 வருடமாக எனக்கு உரிமை இல்லாத சொத்தை பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல அனுமதிக்க வேண்டும்.